




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








| Vol: 03 | Issue: 79 | 4 Pages | 18.10.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 79 | 4 பக்கங்கள் | 18.10.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ**
**தஞ்சல் அறிவார் தொழில்**

**விளக்கம்:**
**அஞ்சத்தக்கதைக் கண்டு அஞ்சாதிருப்பது அறியாமையாகும், அஞ்சத் தக்கதைக் கண்டு அஞ்சுவதே அறிவுடையவரின் தொழிலாகும்.**

# ஆணவப் படுகொலைகளை தடுக்க ஆணையம் அமைக்கப்படும்: முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, அக்.18

சாதிய ஆணவப் படுகொலை விவகாரம் தொடர்பாக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் உரையாற்றியதாவது:

அயோத்திதாசப் பண்டிதர், தந்தை பெரியார், தமிழ்த் தென்றல் திரு. வி.க., புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பேறறிஞர் அண்ணா ஆகியோர் சமூக சீர்திருத்தச் சிந்தனைகளை தமிழ் மண்ணில் விதைத்தார்கள். கல்வி, வேலைவாய்ப்பு, அதிகாரம் பொருந்திய பதவிகளில் அனைவருக்கும் சமவாய்ப்பு, சம அதிகாரம் ஆகியவற்றைத் தருவதன் மூலமாக யாவரும் ஒருவரே என்பதை உருவாக்கவே சீர்திருத்த இயக்கங்கள் போராடியது, வாதாடியது.

சீர்திருத்தச் சிந்தனை தமிழ் மண்ணில்அதிகம்விதைக்கப்பட்டது. இடைக்காலத்தில் புகுந்தவர்களால் தொழில் வேற்றுமையானது; சாதி வேற்றுமையானது. வேற்றுமை விதைக்கப்பட்டதும்,ஒற்றுமைக்கான குரல்கள் தமிழ் மண்ணில் உரக்க எழுந்ததை காண்கிறோம். அனைத்து சாதியினரை அர்ச்சகராக்கி இருக்கிறோம்; சமநீதி, சமூக நீதி உறுதிமொழி எடுக்கிறோம்.

பள்ளி, கல்லூரி விடுதிகளில்சாதி பெயரே கூடாது என சமூக நீதி விடுதிகளாக பெயர் மாற்றியுள்ளோம். இருக்கிறோம். சமூகநீதி சமத்துவம் சகோதரத்துவம் பொதுவுடைமை பொது உரிமை கல்வி உரிமை அதிகாரஉரிமை ஆகிய கொள்கைகள் தான் வேற்றுமையை, பகைமையை விரட்டும். அதனைத் தான் நாங்கள் செய்து வருகிறோம். இதன் மூலமாகதான் சமத்துவ சமுதாயத்தை உருவாக்க முடியும்.



சமூகங்களின் பெயர்களில் 'ன்' விகுதியை நீக்கி 'ர்' என மாற்ற சட்டம் இயற்ற வேண்டும் என பிரதமரை சந்தித்தபோது கோரிக்கையை முன்வைத்தேன். எதற்காகவும் ஒருவரை, மற்றொருவர் கொல்வதை நாகரீக சமூகத்தில் ஏற்க முடியாது. உலகம் அறிவு மயம் ஆகிறது, ஆனால் அன்புமயம்ஆவதுதடுக்கப்படுகிறது. என்பது தான் இன்று சீர்திருத்த எண்ணம் கொண்டவர்களை வாட்டி வருகிறது. உலகம் முழுக்க பரவி, நம் அறிவினால் மதிக்கப்பட்டு வரும் தமிழ்ச்சமுதாயம்,உள்ளூரில்சண்டை போட்டுக்கொள்வது என்னநியாயம்? என்பதுதான் நம்மை வருத்தும் கேள்வி ஆகும்.

ஆணவப் படுகொலைகளை தடுக்க ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி கே.என்.பாஷா தலைமையில் ஆணையம் அமைக்கப்படும். சட்ட வல்லுநர்கள், முற்போக்கு சிந்தனையாளர்கள், மானுடவியல் அறிஞர்கள் கொண்ட இந்த ஆணையம் பல்வேறு தரப்பிலும் கருத்துகளை பெற்று உரிய பரிந்துரைகளை அரசுக்கு வழங்கும், அதன் அடிப்படையில் தனிச்சட்டம் இயற்றப்படும்.

எதன் காரணமாகவும் ஒருவரை கொலை செய்வதை நாகரீக சமூகம் ஏற்காது. அவ்வப்போதுஎங்கேயேனும் நடக்கும்சம்பவம்தலைகுனிய வைக்கிறது. அனைத்து விதமான ஆதிக்கத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். ஆதிக்க எதிர்ப்பும், சமத்துவச் சிந்தனையும் கொண்ட சுயமரியாதையும், அன்பும் சூழ்ந்த மானுடத்தை உருவாக்குவதற்கான பரப்புரையை ஓர் இயக்கமாக முன்னெடுத்து செல்ல வேண்டியது நம் அனைவரின் கடமை. சீர்திருத்தப் பரப்புரையை குற்றத்திற்கான தண்டனையும்,வாளும்கேடயமுமாக முன்னெடுக்கப்பட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# ஏமனில் கேரள நர்சுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை நிறுத்திவைப்பு சுப்ரீம் கோர்ட்டில் தகவல்



புதுடெல்லி, அக்.18

கேரள மாநிலம் பாலக்காட்டை சேர்ந்த நிமிஷா பிரியா (வயது 38) என்ற நர்ஸ், ஏமனில் உள்ள ஆஸ்பத்திரி ஒன்றில் பணியில் இருந்தார். பின்னர் அந்த நாட்டை சேர்ந்த தலால் அப்தோ மஹ்தி என்பவருடன் இணைந்து ஆஸ்பத்திரி ஒன்று தொடங்க திட்டமிட்டதாகவும், அதில் ஏற்பட்ட தகராறில் மஹ்தியை கொலை செய்ததாகவும் கடந்த 2017ம் ஆண்டு நிமிஷா கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

தலைநகர் சனாவில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிமிஷாவுக்கு கடந்த ஜூலை 16ந்தேதி மரண தண்டனை நிறைவேற்றப்படும் என்று தகவல் வெளியானது. பின்னர் கடைசி நேரத்தில் அது நிறுத்தி வைக்கப்பட்டது. முன்னதாக நர்ஸ் நிமிஷாவை விடுவிக்க தூதரக ரீதியிலான நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு உத்தரவிடக்கோரி சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு நேற்று நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா அமர்வு முன்பு மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், 'தண்டனை நிறைவேற்றும் விவகாரத்தில் என்ன நடந்தது?' என கேள்வி எழுப்பினர். அதற்கு இந்த வழக்கின் மனுதாரரும், நிமிஷா பிரியாவுக்கு சட்ட உதவி அளித்து வரும் அமைப்புமான, 'நிமிஷா பிரியாவை பாதுகாக்கும் சர்வதேச நடவடிக்கை கவுன்சில்' சார்பில் ஆஜரான வக்கீல், 'தண்டனை நிறைவேற்றுவது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது' என்றார்.

மேலும் இந்த வழக்கின் விசாரணையை ஒத்திவைக்குமாறும் கேட்டுக்கொண்டார். பின்னர் மத்திய அரசு சார்பில் ஆஜரான அட்டார்னி ஜெனரல் வெங்கடரமணி கூறும்போது, இந்த விவகாரத்தில் புதிய மத்தியஸ்தர் ஒருவர் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தெரிவித்தார். இந்த விவகாரத்தில் ஒரே நல்ல விஷயம் என்னவென்றால், எதுவும் பாதகமாக நடக்கவில்லை என்றும் அவர் கூறினார். இதைத் தொடர்ந்து வழக்கின் விசாரணையை அடுத்த ஆண்டு (2026) ஜனவரிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர். அதேநேரம் முன்கூட்டியே விசாரணை தேவை என்றால் மனுதாரர்கள் முறையிடலாம் என்றும் கூறினர்.

# திருச்செந்தூர் கந்தசஷ்டி திருவிழாவில் அன்னதானம் வழங்க அனுமதி பெற வேண்டும்: தூத்துக்குடி கலெக்டர் அறிவிப்பு

தூத்துக்குடி அக்.18

திருச்செந்தூர் சுப்ரமணியசுவாமி கோவில் கந்தசஷ்டி திருவிழாவை முன்னிட்டு அன்னதானம் வழங்க உணவு பாதுகாப்புத்துறையின் அனுமதி பெற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருச்செந்தூர் சுப்ரமணியசுவாமி கோவில் கந்தசஷ்டி திருவிழா 2025ம் ஆண்டு 22.10.2025 முதல் 2.11.2025 வரை நடைபெறுவதை முன்னிட்டு அன்னதானம் வழங்க உத்தேசிக்கும் தனி நபர்கள் மற்றும் நிறுவனங்கள் www.foscos.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாக பதிவு செய்து மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அனுமதிக்கபட்ட இடங்களில் மட்டுமே அன்னதானம் வழங்க வேண்டும்.

அன்னதானம் வழங்க விரும்புவோர் தூத்துக்குடி இணை இயக்குநர், வேளாண்மைத்துறை கட்டிடம், தரைதளம், மாவட்ட ஆட்சியர் வளாகம், கோரம்பள்ளத்தில் இயங்கும் உணவு பாதுகாப்பு துறை மாவட்ட நியமன அலுவலர் அலுவலகத்தில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை அளித்து உணவு பாதுகாப்பு துறையின் பதிவுச்சான்றிதல் பெற வேண்டும்.

அதற்கு பாஸ்போர்ட் அளவு புகைப்படம் முகவரி தெரிவிக்கும் ஏதேனும் அங்கிகரிக்கப்பட்ட சான்று நகல் ஆகிய விவரங்களை அளிக்க வேண்டும். அன்னதானம் வழங்குவோர்கள் தங்கள் சார்ந்தவர்களின் விவரத்தினை ஆதார் அட்டை நகலுடன் சமர்பிக்க வேண்டும். எக்காரணத்தை கொண்டும் அன்னதானம் அளிப்பவர்கள் அனுமதிக்கப்பட்ட இடத்தில் அன்னதானம் மட்டுமே அளிக்க வேண்டும. அனுமதி அளிக்கப்பட்ட நாள், நேரத்தில் மட்டுமே அன்னதானம் வழங்கப்பட வேண்டும்.

அனுமதி பெறாமல் அன்னதானம் வழங்க கூடாது. கோவில் வளாகப்பாதையில் பக்தர்களுக்கு இடையூறு இல்லாமல் வளாகப் பாதையிலிருந்து 100 மீட்டர் உட்புறம் அன்னதானம் வழங்க வேண்டும். நோய்தொற்று உள்ளவர்களை அன்னதானம் சமைக்கவோ மற்றும் வழங்கவோ அனுமதிக்ககூடாது.


வாழை இலையில் மட்டுமே அன்னதானம் வழங்க வேண்டும். உணவு பொருட்கள் தரமானதாகவும், தூய்மையானதாகவும் மற்றும் கலப்படம் இல்லாமலும் இருக்க வேண்டும். பிளாஸ்டிக் பொருட்களை கொண்டு அன்னதானம் வழங்ககூடாது. உணவு கழிவு பொருட்களை போடுவதற்கு ஏதுவாக குப்பை தொட்டிகளை ஏற்பாடு செய்து அன்னதானம் அளிப்பவர்களே உணவு கழிவுகளை சேகரித்து அகற்ற வேண்டும்.

அன்னதானம் வழங்குமிடத்தை சுத்தம் செய்து விட்டு செல்ல வேண்டும். அனுமதி பெறாமல் அன்னதானம் வழங்கிட இயலாது. மேலும் போதிய வழிக்காட்டு முறைகளை பின்பற்றாதவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் இதுகுறித்த விபரங்களுக்கு 04612900669 என்ற எண்ணிலும், வாட்ஸ்அப் மூலம் 9444042322 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# குஜராத் அரசியலில் பரபரப்பு: முதல்மந்திரியை தவிர மந்திரிகள் அனைவரும் ராஜினாமா.. மந்திரிசபை விரிவாக்கம்

ஆமதாபாத், அக்.18

பிரதமர் மோடி மற்றும் உள்துறை மந்திரி அமித்ஷாவின் சொந்த மாநிலமான குஜராத்தில் கடந்த 2022ம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலில் பா.ஜனதா மீண்டும் வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. இதன்மூலம் முதல்மந்திரி பூபேந்திர படேல் 2வது முறையாக முதல் மந்திரி பதவியை தக்க வைத்தார்.



அவரது மந்திரி சபையில் 16 மந்திரிகள் இடம் பெற்றிருந்தனர். இதில் 8 பேர் கேபினட் அந்தஸ்துடனும், மீதமுள்ளவர்கள் இணை மந்திரிகளாகவும் இருந்தனர். பூபேந்திர படேல் மந்திரிசபையில் இணை மந்திரியாக இருந்த ஜகதீஷ் விஸ்வகர்மா இந்த மாத தொடக்கத்தில் மாநில பா.ஜனதா தலைவராக நியமிக்கப்பட்டார்.

மத்திய மந்திரி சி.ஆர்.பாட்டீல் வசம் இருந்த பா.ஜனதா தலைவர் பதவி, மாநில மந்திரியிடம் வழங்கப்பட்டது. குஜராத் சட்டசபை 182 உறுப்பினர்களை கொண்ட நிலையில், மாநில அரசில் 27 பேர் அல்லது மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் 15 சதவீதம் பேர் மந்திரிகளாக பதவி வகிக்க முடியும். அந்தவகையில் மாநில மந்திரி சபை இன்று (சனிக்கிழமை) விரிவாக்கம் செய்யப்படுவதாக நேற்று காலையில் மாநில அரசு தகவல் வெளியிட்டது.

அதற்கு வசதியாக முதல்மந்திரி பூபேந்திர படேலை தவிர அவரது மந்திரிசபையில் இடம்பெற்றிருந்த 16 மந்திரிகளும் மாலையில் தங்கள் பதவியை ராஜினாமா செய்தனர்.

இந்நிலையில் புதிய மந்திரிசபை இன்று காலை 11.30 மணியளவில் பதவியேற்கிறது. அதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. புதிய மந்திரிசபையில் சுமார் 10 புதுமுகங்கள் இடம்பெறுவார்கள் என மாநில பா. ஜனதா வட்டாரங்கள் தெரிவித்தன. மேலும் நேற்று ராஜினாமா செய்தவர்களில் பாதிக்கு மேற்பட்டவர்களுக்கு மீண்டும் மந்திரி பதவி கிடைக்காது என்றும் அரசுவட்டாரங்கள்கூறியுள்ளன. அவர்கள்கட்சிப்பணிகளுக்குஅனுப்பக்கூடும் என தெரிகிறது.

குஜராத் மந்திரிகள் கூண்டோடு ராஜினாமா செய்த சம்பவம் மாநிலத்தில் நேற்று பெரும் அதிர்வலைகளை கிளப்பி இருந்தது.

# கடலூரில் இடி தாக்கி இறந்த 4 பேரின் குடும்பத்திற்கு தலா ரூ.25 லட்சம் நிவாரணம்: ராமதாஸ் கோரிக்கை

சென்னை அக்.18

பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

வடகிழக்கு பருவமழை நேற்று தொடங்கிய நிலையில், கடலூர் மாவட்டம் வேப்பூர் பகுதியில் நேற்று மாலை திடீரென இடி மின்னல் தாக்கியது. இதில் வேப்பூர் அருகிலுள்ள அரியநாச்சி கிராமத்தில், மக்காச்சோள வயலில் களை எடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்த அரியநாச்சியை சேர்ந்த ராஜேஸ்வரி (வயது 40), கழுதூரைச் சேர்ந்த விவசாய தொழிலாளர்களான கனிதா(35), பாரிஜாதம்(40), சின்னப்பொண்ணு(எ) ராஜேஸ்வரி(41) ஆகிய 4 பேர் திடீரென இடி மின்னல் தாக்கியதில், விவசாய நிலத்திலேயே உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிலையில், இறந்தவர்களின் குடும்பத்திற்கு தமிழ்நாடு அரசு 5 லட்சம் ரூபாய் நிவாரண நிதி அறிவித்துள்ளது போதுமானதல்ல. மேலும் கள்ளச்சாராயம் குடித்து மரணமடைந்தவர்கள் குடும்பத்தினருக்கு 10 லட்சம் ரூபாய், அரசியல் கட்சியின் கூட்டத்தில் கலந்து கொண்டு இறந்தவர்களுக்கும் 10 லட்சம் ரூபாய் என நிவாரண நிதியை அரசு வழங்குகின்ற நிலையில், விவசாய பணியின் போதே இறந்த நால்வருமே நடுத்தர வயதுடைய குடும்பத் தலைவிகள் என்பதால் அவர்களை நம்பித்தான் குடும்பத்தினர் மற்றும் குழந்தைகளின் எதிர்காலம் உள்ளது என்பதாலும், விவசாய தொழிலாளர்களுக்கு பெரிய அளவில் சொத்துக்களோ, நிரந்தர வருவாயோ இல்லை என்பதாலும் இறந்தவர்கள் குடும்பத்திற்கு தலா 25 லட்சம் ரூபாய் நிவாரண நிதியும், குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு அரசு வேலையும் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# அரசு மருத்துவமனையில் குழந்தைக்கு வழங்கப்பட்ட 'ஆன்டிபயாடிக்' மருந்தில் புழுக்கள்

மத்தியபிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களில் கோல்ட்ரிப் இருமல் மருந்தை குடித்த 20க்கு மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்தனர். இதில் மத்திய பிரதேச மாநிலத்திலேயே அதிக உயிரிழப்புகள் நிகழ்ந்தன. இந்த அதிர்ச்சி மறைவதற்குள் அங்குள்ள மருத்துவமனைஒன்றில்குழந்தைக்குவழங்கப்பட்டஆன்டிபயாடிக் மருந்தில் புழுக்கள் கிடந்தது பகீர் கிளப்பி இருக்கிறது.

அங்குள்ள குவாலியர் மாவட்டத்தின் மொரார் நகரில் உள்ள அரசு மருத்துவமனையி பெண் ஒருவர் தனது குழந்தைக்கு மருத்துவ சிகிச்சைக்காக சென்றார். அங்கு அசித்ரோமைசின் என்ற ஆன்டிபயாடிக் மருந்து குழந்தைக்கு கொடுக்கப்பட்டது. இந்த மருந்து பாட்டிலில் புழுக்கள் நெளிந்ததை பார்த்து அந்த பெண் பெரும்அதிர்ச்சிஅடைந்தார். இதுகுறித்துமருந்து ஆய்வாளர்களிடம் புகார் அளித்தார். இந்த மருந்து மத்திய பிரதேசத்தை மையமாக கொண்டு செயல்படும் மருந்து நிறுவனம் ஒன்று தயாரித்தது ஆகும். அந்த பெண்ணின் புகாரை தொடர்ந்து மருந்து ஆய்வாளர்கள் களத்தில்இறங்கினர். அந்தபெண்ணிடம்இருந்துமருந்துபாட்டிலை கைப்பற்றிய அவர்கள், அதன் மாதிரிகளை போபால் மற்றும் கொல்கத்தாவில் உள்ள மத்திய மருந்து பரிசோதனைக்கூடத்துக்கு ஆய்வுக்காக அனுப்பி வைத்தனர். மேலும் அந்த மருத்துவமனையில் 306 பாட்டில்களில் இருந்த மேற்படி மருந்தும் அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டது. அதில் சில பாட்டில்களில் இருந்தும் மாதிரிகளைஎடுத்து ஆய்வுக்குஅனுப்பிவைக்கப்பட்டது. அவற்றில் பூச்சி, புழுக்கள்இருப்பதற்கானஅறிகுறிஎதுவும்காணப்படவில்லை என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. எனினும் அவை ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன. கோல்ட்ரிப் இருமல் மருந்து ஏற்படுத்திய உயிரிழப்புகளால் ஏற்பட்ட அதிர்ச்சி மறைவதற்குள், ஆன்டிபயாடிக்மருந்தில்புழுக்கள்கிடந்தவிவகாரம் வெளியாகி இருப்பது மத்திய பிரதேசத்தில் மருத்துவத்துறை வட்டாரத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.



குன்னூர் நகராட்சி பணியாளர் சங்கத்தின் சார்பில் நேற்று தீபாவளி பண்டிகை நகராட்சி ஆணையாளர் தலைமையில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. நகராட்சி பொறியாளர், உதவி வருவாய் அலுவலர், நகரமைப்பு அலுவலர் மற்றும் பணியாளர்கள் அனைவரும் பங்கேற்றனர். புகையில்லா தீபாவளி கொண்டாட வேண்டி அனைவரும் உறுதி ஏற்றனர். இதனையடுத்து சங்கத்தின் சார்பில் பணியாளர்கள் அனைவருக்கும் பலகாரம் வழங்கப்பட்டது பின்னர் பணியாளர்கள் அனைவரும் நகராட்சி அலுவலக வளாகத்தில் தீபாவளி பட்டாசு வெடித்து மகிழ்ந்தனர். மேலும் நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு நகராட்சி சார்பில் ஆணையாளர் இளம்பரிதி தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சீருடை மற்றும் கம்பளி வழங்கினார். இதில் சுகாதார அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வாளர் கலந்து கொண்டனர்.




# இந்தியாவில் யு.பி.ஐ. மூலம் 85 சதவீத டிஜிட்டல் பணப் பரிமாற்றம் ரிசர்வ் வங்கி கவர்னர் தகவல்

புதுடெல்லி, அக்.18

அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிதியத்தின் வருடாந்திர கூட்டங்களில் ரிசர்வ் வங்கி கவர்னர் சஞ்சய் மல்ஹோத்ரா கலந்து கொண்டார்.

அங்கு ரிசர்வ் வங்கி ஏற்பாடு செய்த 'டிஜிட்டல் பொது தளங்கள்' என்ற தலைப்பிலான கருத்தரங்கிலும் சஞ்சய் மல்ஹோத்ரா பங்கேற்றார். அதில் அவர் பேசியதாவது:

யு.பி.ஐ. என்பது முக்கியமான டிஜிட்டல் பொது தளம். பண பரிமாற்ற முறையையே யு.பி.ஐ. மாற்றி அமைத்துள்ளது. ஒரு வங்கிக்கணக்கில் இருந்து மற்றொரு வங்கிக்கணக்குக்கு விரைவாக பணத்தை மாற்ற முடிகிறது.

இந்தியாவில் நடக்கும் டிஜிட்டல் பண பரிமாற்றங்களில் 85 சதவீத பரிமாற்றங்கள், யு.பி.ஐ. மூலம்தான் நடக்கின்றன. ஒவ்வொரு மாதமும் யு.பி.ஐ.யை பயன்படுத்தி சுமார் 2 ஆயிரம் கோடி பரிமாற்றங்கள் நடக்கின்றன. அவற்றின் மதிப்பு 28 ஆயிரம் கோடி டாலர் (ரூ.24 லட்சத்து 64 ஆயிரம் கோடி) ஆகும்.

பாதுகாப்பான பண பரிமாற்றத்துக்கு இந்தியாவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம். சிறு வியாபாரிகள் மற்றும் சிறிய நிறுவனங்களும் டிஜிட்டல் முறையில் பணத்தை பெறலாம். அதன்மூலம் நிதி வரலாற்றை உருவாக்கி, குறைந்த வட்டியில் கடன் பெறலாம். 'உலகமே ஒரு குடும்பம்' என்ற வசுதைவ குடும்பகம் தத்துவத்தில் இந்தியா நம்பிக்கை கொண்டுள்ளது. ஆகவே, டிஜிட்டல் பொது தளங்களின் பலன்கள் உலகம் முழுவதும் கிடைக்க வேண்டும் என்று விரும்புகிறோம். இதுதொடர்பான சர்வதேச ஒத்துழைப்புக்கு தயாராக இருக்கிறோம். இவ்வாறு அவர் பேசினார்.

# பைக் விபத்தில் சினிமா துணை நடிகர் உயிரிழப்பு

தூத்துக்குடி அக்.18

நெல்லை மாவட்டம், பேட்டை குளத்தை சேர்ந்த மாசானம் மகன் ராஜ் (வயது 45). இவர் கிராக்கி, விதி எண்3, உயிர் மூச்சு ஆகிய சினிமா படங்களில் துணை கதாபாத்திரங்களில் நடித்துள்ளார். இவரது மனைவி சாய்ஸ். இவர் ஓட்டப்பிடாரம் அருகே புதியம்புத்தூரில் உள்ள தனியார் பள்ளியில் ஆசிரியராக வேலை பார்த்து வருகிறார். இந்த தம்பதிக்கு ரூபன்ஜான் என்ற மகனும், டைட்டஸ் மேத்திவ் என்ற மகளும் உள்ளனர்.

இவர்கள் அனைவரும் கடந்த சில வருடங்களாக தூத்துக்குடி கே.டி.சி.நகரில் குடியிருந்து வருகின்றனர். நடிகர் ராஜ் நேற்று மாலை தூத்துக்குடியில் இருந்து புதியம்புத்தூர் வழியாக ஓசநூத்து நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். செவல்குளம் அருகே வந்தபோது திடீரென நிலை தடுமாறி மோட்டார் சைக்கிளில் இருந்து தவறி கீழே விழுந்தார். அப்போது சாலையில் கிடந்த கல் மீது மோதியதால் பலத்த காயமடைந்த



ராஜ் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

இதுகுறித்து தகவல் அறிந்ததும் ஓட்டப்பிடாரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் பால்யேசுதாசன் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். பின்னர் நடிகர் ராஜ் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இந்த விபத்து குறித்து ஓட்டப்பிடாரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தஞ்சாவூர்: கார்லாரி நேருக்கு நேர் மோதிய விபத்தில் தம்பதி பலி

தஞ்சாவூர் அக்.18

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியைச் சேர்ந்த சுப்பிரமணியன் (வயது 60) அவரது மனைவி கலாவதி(59) உள்ளிட்ட 5 பேர் இன்று அதிகாலை ஒரு காரில் தங்களுடைய 60ம் திருமணத்திற்காக திருக்கடையூருக்கு சென்று கொண்டிருந்தனர். தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டத்தில் உள்ள நரசிங்கன் பேட்டை அருகே இவர்களுடைய கார் சென்றபோது எதிரே வந்த லாரியோடு நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது.





இந்த விபத்தில் சுப்பிரமணியன், கலாவதி தம்பதியினர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் இந்த விபத்தில் படுகாயம் அடைந்த கார் டிரைவர் உள்பட 3 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இந்த விபத்து குறித்து சம்பந்தப்பட்ட போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# பல்கலைக்கழக மசோதாக்களை ஜனாதிபதிக்கு அனுப்பிய கவர்னருக்கு எதிரான தமிழக அரசு மனுக்கள் மீது விசாரணை

புதுடெல்லி, அக்.18

கும்பகோணத்தில் கலைஞர் பல்கலைக்கழகத்தை உருவாக்குவதற்கான சட்ட மசோதா, தமிழ்நாடு உடற்கல்வியியல், விளையாட்டு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் நியமனம், நீக்குவதற்கான அதிகாரத்தை அரசுக்கு வழங்கும் சட்டத்திருத்த மசோதா உள்ளிட்டவை கடந்த ஏப்ரல் மாதம் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டு, கவர்னருக்கு அனுப்பிவைக்கப்பட்டன. இவற்றுக்கு ஒப்புதல் அளிக்காமல், ஜனாதிபதிக்குத் தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி கடந்த ஆகஸ்ட் முதல் வாரத்தில் அனுப்பி வைத்தார்.



கவர்னரின் இந்த நடவடிக்கையை எதிர்த்தும், இவ்வாறு அனுப்பி வைத்ததை ரத்துச் செய்யக் கோரியும் தமிழ்நாடு அரசின் சார்பில் வக்கீல் மிஷா ரோத்தகி, டி.ஹரீஷ் குமார் சுப்ரீம் கோர்ட்டில் ரிட் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். இந்த ரிட் மனுக்களை சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையிலான அமர்வு விசாரிக்கிறது.

# சென்னையில் பன்னாட்டு மருத்துவ மாநாடு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்

சென்னை, அக்.18

சென்னையில் பன்னாட்டு மருத்துவ மாநாட்டை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;




"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம் சார்பில் "எதிர்கால மருத்துவம் 2.0" இரண்டாவது பன்னாட்டு மருத்துவ மாநாடு தொடங்கி வைத்து, துணைவேந்தர் மரு.நாராயணசாமி இயற்றிய "நவீன மருத்துவ முன்னேற்றத்தில் செயற்கை நுண்ணறிவின் பங்கு" எனும் நூலினை வெளியிட்டார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் செந்தில்குமார், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக துணை வேந்தர் நாராயணசாமி, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் சுகந்தி ராஜகுமாரி, கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் பார்த்தசாரதி, பன்னாட்டு மருத்துவ பேராசிரியர்கள் ரெபேக்கா மில்லர், கபிலன் தர்மராஜன், நாகலிங்கம் வர்ணகுலேந்தரன் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், மருத்துவ மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாட்ஸ்அப் ஹேக்கிங் மோசடி அதிகரிப்பு: காவல்துறை எச்சரிக்கை

தூத்துக்குடி அக்.18

தூத்துக்குடி மாவட்ட காவல்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

தற்போது வாட்ஸ்அப் ஹேக்கிங் மோசடிகள் பெருமளவில் பரவி வருகின்றன. இந்த மோசடி வங்கிகள் மற்றும் அரசு அமைப்புகளின் பெயரில் மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

இந்த மாதிரியான போலி செய்திகள் பொதுவாக "Banks", "Aadhaar Updates", "Traffic eChallan Payment" போன்ற பெயர்களில் நம்பகமான குழுக்கள் போன்று போலி வாட்ஸ்அப் குழுவில் இருந்து அனுப்பப்படுகின்றன. அந்த குழுக்களில் உள்ள மோசடியாளர்கள் "Rewards", "KYC updates", "cashback offers" என்ற பெயரில் போலியான APK file அல்லது லிங்ஸ் அனுப்புவார்கள். அதனை உங்கள் செல்போனில் பதிவிறக்கம் செய்தால் மோசடியாளர்கள்

உங்கள் செல்போனை ஹேக் செய்து அதன் மூலம் உங்கள் வாட்ஸ்அப் செய்திகள், வங்கி கணக்கு விவரங்கள், OTP மற்றும் தனிப்பட்ட தகவல்களை திருடியும் மேலும் உங்கள் whatsapp கணக்கை பயன்படுத்தி உங்கள் செல்போன் contactல் உள்ள நபர்களுக்கும் அந்த மோசடியை பரப்புகின்றனர்.

எனவே இதுபோன்ற அங்கீகரிக்கப்படாத APK அப்ளிகேஷன்கள் வாட்ஸ்அப், மின்னஞ்சல் அல்லது எஸ்எம்எஸ் வழியாக வரும் எந்த ஒரு பயன்பாட்டையும் அது நண்பர் அல்லது குடும்பத்தினர் அனுப்பியதாக இருந்தாலும் கூட நிறுவ வேண்டாம்.

இதிலிருந்து தற்காத்து கொள்ளும் வழிமுறைகள்:

இதுபோன்ற APK file அல்லது லிங்கை திறக்கவோ அல்லது பதிவிறக்கம் செய்யவோ கூடாது.

வாட்ஸ்அப்பில் இரு நிலை உறுதிப்படுத்தலை (TwoStep Verification) நிறுவி அதன் வழிமுறைகளை பின்பற்றி PIN அமைப்பை பயன்படுத்தி பாதுகாக்கலாம். உங்கள் கணக்கு முடப்பட்டாலோ அல்லது ஹேக் செய்யப்பட்டாலோ உடனடியாக support@whatsang.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பி அல்லது https://www.whatsapp.com/contact/?subject=messenger என்ற இணைப்பை பார்வையிடவும்.

எந்தவொரு நிதி இழப்பு அல்லது இணைய மோசடி நடந்திருந்தால் உடனடியாக 1930 எண்ணிற்கு அல்லது www.cybercrime.gov.in தளத்தில் புகார் அளிக்கவும். எனவே இதுபோன்ற சைபர் மோசடிகளிலிருந்து எச்சரிக்கையாக இருந்து தற்காத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பாக்ஸ்கான் தொழில் முதலீடு: குடுகுடுப்பைக்காரரை போல டி.ஆர்.பி.ராஜா பேசக்கூடாது அன்புமணி

சென்னை, அக்.18

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டிற்கு பாக்ஸ்கான் நிறுவனம் உறுதியளித்த ரூ.15,000 கோடி முதலீடுகள் கண்டிப்பாக வரும்; கண்டிப்பாக வரும்; கண்டிப்பாக வரும் என்று தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா கூறியிருக்கிறார். அந்த முதலீடுகள் எப்படி வரும்? என்பதைத் தான் கூற மறுக்கிறார். அமைச்சர் கூறுவதைப் பார்க்கும் போது, நல்ல காலம் பொறக்குது; நல்ல காலம் பொறக்குது என்று குடுகுடுப்பைக்காரர் கூறுவதைப் போலத் தான் இருக்கிறது. டி.ஆர்.பி. ராஜா அமைச்சரைப் போல தெளிவாகக் கூற வேண்டும்; ஜோதிடம் கூறுவதைப் போல பேசிக் கொண்டிருக்கக்கூடாது.

பாக்ஸ்கான் நிறுவனத்தின் தொழில் முதலீடுகள் குறித்த சிக்கலில் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா நிமிடத்திற்கு நிமிடம் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டிருக்கிறார். கடந்த 14ஆம் தேதி இந்த விவகாரம் தொடர்பான எனது குற்றச்சாட்டுக்கு தர்க்கரீதியாக எந்த விளக்கத்தையும் அளிக்க முடியாத அமைச்சர், தேவையில்லாமல் குடும்ப சிக்கலை இழுத்தார். சட்டப்பேரவையில் நேற்று இது குறித்து விளக்கமளிக்கும் போது முதலீடு செய்யும் பாக்ஸ்கான் நிறுவனமும், முதலீடு செய்யப் போவதில்லை என்று கூறிய பாக்ஸ்கான் நிறுவனமும் வேறு வேறு என்று கூறுகிறார். திமுகவின் ஐ.டி, அணி தலைவராக இத்தகைய தகவல்களையெல்லாம் கூறி மற்றவர்களை ஏமாற்ற முயற்சி செய்யலாம்; அமைச்சராக இது போல ஆதாரமற்ற தகவல்களைக் கூறக் கூடாது.

சென்னை தலைமைச் செயலகத்தில் கடந்த 13 ஆம் நாள் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை பாக்ஸ்கான் நிறுவனத்தின் இந்திய பிரதிநிதி ராபர்ட் வூ சந்தித்து பேசினார். அப்போது தான் ரூ.15,000 கோடி முதலீடுகளுக்கு உறுதியளிக்கப்பட்டதாக அமைச்சர் ராஜா தெரிவித்திருந்தார். அதைத் தான் பாக்ஸ்கான் நிறுவனம் மறுத்திருந்தது. அதுமட்டுமின்றி, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை பாக்ஸ்கான் இந்தியா நிறுவனத்தின் பிரதிநிதி ராபர்ட் வூ தலைமைச் செயலகத்தில் சந்தித்து பேசியது உண்மை; ஆனால், புதிய முதலீடுகள் குறித்து எந்த உறுதியும் அளிக்கவில்லை என்றும் அறிக்கை மூலம் பாக்ஸ்கான் நிறுவனம் தெளிவுபடுத்தி விட்டது. முதலீடு, சந்திப்பு ஆகிய இரு நிகழ்வுகளையும் பாக்ஸ்கான் ஒரே அறிக்கையில் விளக்கியிருக்கும் நிலையில், எப்படி அவை இரு வேறு பாக்ஸ்கான் நிறுவனங்கள் சம்பந்தப்பட்டவையாக இருக்க முடியும்?

தொழில் முதலீடுகள் குறித்த பொய்களை மூடி மறைப்பதற்காக இப்போது Geopolitical issues என்ற புதிய போர்வையை திமுக அரசு கைகளில் எடுத்திருக்கிறது. அமெரிக்கா, சீனா, இந்தியா ஆகிய 3 நாடுகளிலும் செயல்படும் நிறுவனங்களால் இந்தியாவில் செய்யப்படும் முதலீடுகளின் விவரங்களை வெளிப்படையாகத் தெரிவிக்க முடியாதாம். தொழில் முதலீடுகள் எனப்படுபவை துணியைப் போட்டு மூடிக் கொண்டு கைகளின் விரல்களை பிடித்து விலை பேசும் மாட்டுச் சந்தை பேரம் அல்ல.... அரசுக்கும், தொழில் நிறுவனங்களுக்கும் இடையிலான எந்த பரிமாற்றங்களும் வெளிப்படையாகத் தான் இருக்க வேண்டும். இவற்றில் மூடி மறைப்பதற்கு எதுவும் இல்லை.

ஒருவேளை வாதத்திற்காகவே அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா கூறுவதைப் போல Geopolitical issues காரணமாக பாக்ஸ்கான் நிறுவனம் அதன் முதலீட்டை வெளிப்படையாக தெரிவிக்க முடியவில்லை என்றே வைத்துக்கொள்வோம். இனி வரவிருக்கும் அந்த முதலீட்டுக்காக தமிழக அரசுடன் பாக்ஸ்கான் நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தமே செய்து கொள்ளாதா? அப்போது இந்த விவரங்கள் வெளியுலகத்திற்கு தெரிந்து விடாதா? இல்லையென்றால், Geopolitical issues காரணம் காட்டி, பாக்ஸ்கான் நிறுவனத்தின் முதலீடுகளை புரிந்துணர்வு



ஒப்பந்தம் இல்லாமல், அமைச்சரவையின் ஒப்புதலை பெறாமல், தொழிற்சாலை அமைக்க நிலம் ஒதுக்காமல் தமிழக அரசு அனுமதித்து விடுமா? அவ்வாறு செய்வதற்கு தமிழ்நாடு என்ன திமுகவின் குடும்ப நிறுவனமா?

சட்டப்பேரவையில் பேசும் போது இந்த அவையில் இல்லாத சிலர் தமிழ்நாட்டுக்குவரும் முதலீடுகள் குறித்து தவறாக பேசும் போது பல்லாயிரக்கணக்கான இளைஞர்களின் வேலைவாய்ப்புகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைச்சர் ராஜா கூறியிருக்கிறார். எனது குற்றச்சாட்டுகளுக்கு பதில் கூற முடியாமல் தான் பெயர் சொல்லாமல் சொல்லியிருக்கிறார். அமைச்சரின் நிலைமை மிகவும் பரிதாபமாகத்தான் இருக்கிறது.

தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகள் வந்தால் அதைக் கண்டு மகிழ்ச்சியடையும் முதல் மனிதன் நானாகத் தான் இருப்பேன். ஆனால், வராத தொழில் முதலீட்டை வந்ததாகக் கூறி மக்களை ஏமாற்றும் போது , பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவராக அந்த மோசடிகளை அம்பலப்படுத்தாமல் எப்படி இருக்க முடியும்? தமிழ்நாட்டுக்கு ரூ.11.32 லட்சம் கோடி முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மட்டும் தான் கையெழுத்தாகியுள்ளன. ஆனால், அதன் மூலம் 34 லட்சம் இளைஞர்களுக்கு வேலை கிடைத்து விட்டதாக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அவர்களும் பொய் மூட்டைகளை அவிழ்த்து விடவில்லையா?

தொழில் முதலீடுகள் மூலமாக 34 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்து விட்டதாக நம்பும் இளைஞர்கள், ''34 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டும் கூட நமக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லையே. அப்படியானால், 34 லட்சம் பேரில் ஒருவராக வேலை பெறுவதற்கான திறன் கூட நமக்கு இல்லையா?" என்று எண்ணி தன்னம்பிக்கையை இழந்து விட மாட்டார்களா?

தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலைவாய்ப்பு மீது இவ்வளவு அக்கறை கொண்டிருக்கும் அமைச்சர் இராஜா அவர்கள், ''திமுக ஆட்சிக்கு வந்தால் தமிழகத்தில் அமைந்துள்ள தொழிற்சாலைகளில் 75 சதவீத வேலைவாய்ப்புகளை தமிழர்களுக்கே வழங்க சட்டம் இயற்றப்படும்" என்ற தேர்தல் வாக்குறுதியை இன்னும் நிறைவேற்றாதது ஏன்? அதை செய்ய திமுக அரசை எந்த சக்தி தடுக்கிறது?

இவ்வளவு வீர வசனம் பேசும் அமைச்சர் ராஜா அவர்கள், தமிழ்நாட்டுக்கு வந்த தொழில் முதலீடுகள் எவ்வளவு? அவற்றை கொண்டு வந்த நிறுவனங்கள் எவை? ஒவ்வொரு நிறுவனமும் எங்கெங்கு எவ்வளவு முதலீடுகளை செய்து தொழிற்சாலைகளை அமைத்துள்ளன? அவற்றின் மூலம் வேலைவாய்ப்பு பெற்றவர்களின் விவரங்கள் என்ன? என்பன உள்ளிட்ட விவரங்களை வெள்ளை அறிக்கையாக வெளியிட தயங்குவது ஏன்? இதை செய்ய அவரை எந்த Geopolitical issue தடுக்கிறது?

மீண்டும் சொல்கிறேன்... தமிழ்நாட்டுக்கு தொழில் முதலீடுகளை திமுக அரசு கொண்டு வந்தால், அரசியல் வேறுபாடுகளைக் கடந்து வரவேற்பேன். அதே நேரத்தில் வெளிநாடுகளுக்கு அரசு செலவில் சுற்றுலா சென்று திரும்பி விட்டு, முதலீடுகள் குவிந்து விட்டன என்று கதை, திரைக்கதை எழுதி வசனம் பேசினால் அதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எனவே, இனியாவது மக்களை ஏமாற்ற பொய்களை முதலீடு செய்யாமல் உண்மையாகவே தொழில் முதலீடுகளை ஈர்க்க திமுக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கூட்ட நெரிசல் வழக்கு: சி.பி.ஐ. அதிகாரிகள் கரூர் வருகை

கரூர், அக்.19

கரூரில் த.வெ.க. தலைவர் விஜய் கடந்த மாதம் (செப்டம்பர்) 27ந் தேதி பிரசாரம் செய்தபோது கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இதில் பெண்கள், குழந்தைகள் உள்பட 41 பேர் உயிரிழந்த சம்பவம் நாட்டையே உலுக்கியது. இந்த சம்பவம் தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டில் 5 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்கை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு, கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை நடத்த கடந்த 13ந்தேதி உத்தரவிட்டது.



இந்த நிலையில், சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின்படி ஐ.பி.எஸ். அதிகாரி பிரவீன் குமார் தலைமையிலான சி.பி.ஐ. அதிகாரிகள் இன்று கரூர் வந்துள்ளனர்.

சி.பி.ஐ. ஏ.டி.எஸ்.பி. முகேஷ்குமார், டி.எஸ்.பி. ராமகிருஷ்ணன் ஆகியோர் அடங்கிய குழுவினர் கரூருக்கு வந்துள்ள நிலையில், அவர்கள் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான சுற்றுலா மாளிகையில் தங்கியுள்ளனர். கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பான வழக்கின் ஆவணங்களை பெற்றுக்கொண்டு, பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை அவர்கள் நேரில் சந்திக்க உள்ளனர் என்றும், இன்று அல்லது நாளை விசாரணையை அவர்கள் தொடங்குவார்கள் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

# தூத்துக்குடி: கஞ்சா வழக்கில் ஒருவர் குண்டர் சட்டத்தில் கைது

தூத்துக்குடி அக்.18

தூத்துக்குடி மாவட்டம், ஆத்தூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 17.9.2025 அன்று திருச்செந்தூர் யானை சாலை தெருவைச் சேர்ந்த சங்கரநைனார்



மகன் மணிகண்டன் (வயது 37) என்பவர் கஞ்சா விற்பனை செய்தார்.

இது தொடர்பான வழக்கில் மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் இளம்பகவத் உத்தரவின் பேரில் நேற்று ஆத்தூர் காவல் நிலைய போலீசார் மணிகண்டனை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# வனத்துறையினருக்கு போக்குகாட்டி வந்த ரோலக்ஸ் யானை பிடிப்பட்டது

கோயம்புத்தூர் அக்.18

கோவை மாவட்டம் நரசிபுரம் சுற்று வட்டாரப் பகுதிகளில் தொடர்ந்து அட்டகாசம் செய்யும் ரோலக்ஸ் என அழைக்கப்படும் ஆண் காட்டு யானையை மயக்க ஊசி செலுத்தி பிடிக்கும் பணிகளில் வனத்துறையினர் ஈடுபட்டனர். இதற்காக கும்கி யானைகள் வரவழைக்கப்பட்டன. மேலும் சின்னத்தம்பி என்ற கும்கி யானை கெம்பனூர் பகுதிக்கு வரவழைக்கப்பட்டது.

இந்த சூழலில் ரோலக்ஸ் யானையைபிடிப்பதற்காக வசிம், பொம்மன் என்ற 2




கும்கி யானைகள் முதுமலையில் இருந்து நேற்றிரவு கெம்பனூர் பகுதிக்கு அழைத்து வரப்பட்டன. இதனால் ரோலக்ஸ் யானையைபிடிப்பதற்காக கொண்டு வரப்பட்ட கும்கி யானைகளின் எண்ணிக்கை 4ஆக அதிகரித்திருந்தது. அந்த யானையை பிடிக்கும் பணியில் வனத்துறையினர் மும்முரமாக ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் வனத்துறையினருக்கு போக்கு காட்டி வந்த 'ரோலக்ஸ்' யானை பிடிபட்டுள்ளது. இதன்படி புள்ளாகவுண்டன்புதூர் அருகே பெரும்பள்ளம் என்ற இடத்தில் யானை பிடிபட்டது. வனத்துறையினர் மற்றும் கால்நடை மருத்துவ குழுவினர் யானைக்கு மயக்க ஊசி செலுத்தினர். இதனைத்தொடர்ந்து 4 கும்கி யானைகள் உதவியுடன் 'ரோலக்ஸ்' யானையை பிடித்த வனத்துறையினர், அதனை வாகனத்தில் ஏற்றினர்.

# திருச்செந்தூர் கோவில் கந்தசஷ்டி திருவிழா: பாதுகாப்பு ஏற்பாடுகளை டி.ஐ.ஜி., எஸ்.பி. ஆய்வு

தூத்துக்குடி அக்.18

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் கந்த சஷ்டி திருவிழா வருகின்ற 22.10.2025 அன்று யாக சாலை பூஜையுடன் தொடங்கி 27.10.2025 அன்று சூர சம்ஹார நிகழ்வு மற்றும் 28.10.2025 அன்று திருக்கல்யாண நிகழ்வுடன் முடிவடைகிறது.

இந்த திருவிழாவை முன்னிட்டு திருநெல்வேலி சரக காவல்துறை டி.ஐ.ஜி. (பொறுப்பு) சந்தோஷ் ஹாதிமணி மற்றும் தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் ஆகியோர் நேற்று திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் வளாகம், சூரசம்காரம் நடைபெறும் கடற்கரை பகுதி, கோவில் சுற்றுவட்டார பகுதி மற்றும் வாகன நிறுத்துமிடம் ஆகிய பகுதிகளுக்கு நேரில் சென்று போலீசாரின் பாதுகாப்பு பணிகள் மற்றும் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டு, காவல்துறை அதிகாரிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினர். இந்த நிகழ்வின் போது திருச்செந்தூர் உட்கோட்ட டி.எஸ்.பி. மகேஷ்குமார் உட்பட காவல்துறையினர் மற்றும் திருச்செந்தூர் கோவில் இணை ஆணையர் ராமு ஆகியோர் உடனிருந்தனர்.

# படகு மூலம் இலங்கைக்கு தப்ப முயன்ற 4 அகதிகள் கைது

ராமேசுவரம், அக்.18

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அகதிகள் முகாம் உள்ளிட்ட தமிழகத்தில் உள்ள பல்வேறு முகாம்களில் இலங்கையில் இருந்து வந்த ஏராளமான இலங்கை தமிழர்கள் குடும்பத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் கள்ளத்தனமாக படகு மூலம் இலங்கைக்கு தப்பி வந்த 4 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த 4 பேரும் தமிழகத்தில் உள்ள அகதிகள் முகாமில் தங்கி இருந்ததாகவும், கள்ளத்தனமாக படகு மூலம் மீண்டும் இலங்கைக்கு தப்பி சென்றபோது சிக்கியதும் தெரியவந்தது.

இவர்கள் எந்த முகாமில் தங்கி இருந்தவர்கள்? ராமேசுவரம், தனுஷ்கோடி கடல் பகுதி வழியாக தப்பி சென்றார்களா? அல்லது வேறு ஏதேனும் பகுதியிலிருந்து சென்றார்களா? என உளவு பிரிவு போலீசாரும் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வன்கொடுமை தடுப்பு சட்டத்தில் திமுக இளைஞரணி நிர்வாகி கைது

தூத்துக்குடி, அக்.18

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் கல்யாணசுந்தரம் நகரை சேர்ந்த காமராஜ் மகன் சிவராஜன் (வயது 32), தி.மு.க. ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஆவார். இவர் நகராட்சி கழிவறைகளை ஒப்பந்தம் எடுத்து நடத்துகிறார். இவரிடம் வேலை பார்த்த, சின்னதம்பி(39) என்பவர், சில நாட்களாக பணிக்கு வரவில்லையாம்.

இதனையடுத்து அவரது வீட்டிற்கு சென்ற சிவராஜன், சின்னதம்பியை அவதூறாக பேசியதுடன் தாக்கியதாக கூறப்படுகிறது. இதனால் படுகாயமடைந்த சின்னதம்பி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இதுகுறித்து அவர் அளித்த புகாரின் பேரில் திருச்செந்தூர் காவல் நிலைய போலீசார் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து சிவராஜனை கைது செய்தனர்.

# மின்னல் தாக்கி 4 பெண்கள் உயிரிழப்பு: கடலூர் அருகே சோகம்

கடலூர், அக்.18

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளது. பருவமழை தொடங்கிய முதல் நாளே பல்வேறு இடங்களிலும் கனமழை வெளுத்து வாங்கி வருகிறது. பல மாவட்டங்களில் பரவலாக இடி மின்னலுடன் மழை பெய்து வருகிறது. இந்தாண்டு இயல்பை விட அதிக மழை இருக்கும் என வானிலை மையம் கணித்துள்ளது. இந்நிலையில், கடலூர் அருகே மின்னல் தாக்கியதில் 4 பெண்கள் உயிரிழந்த சோக சம்பவம் நடைபெற்றுள்ளது.

கடலூர் மாவட்டம் வேப்பூர் அரகே கழுதூர் கிராமத்தைச் சேர்ந்த பெண்கள், அப்பகுதியில் மக்காச்சோளம் பயிரிட்டு இருந்த நிலத்தில் களை எடுத்து கொண்டு இருந்தனர். அப்போது மின்னல் தாக்கியதில் பாரிஜாதம், ராஜேஸ்வரி, சின்னப்பொண்ணு, கணிதா ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். தவமணி என்பவர் படுகாயத்துடன் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். மின்னல் தாக்கி ஒரே ஊரை சேர்ந்த 4 பெண்கள் உயிரிழந்தது அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# நடிகர் ரஜினிகாந்துடன் ஓ.பன்னீர்செல்வம் திடீர் சந்திப்பு

சென்னை அக்.18


சென்னையில் நடிகர் ரஜினிகாந்தை அவரது வீட்டிற்கு சென்று முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் சந்தித்து பேசியுள்ளார். ஓ.பன்னீர்செல்வத்துடன் அவரது மகன் ஓ.பி.ரவீந்திரநாத்தும் நடிகர் ரஜினிகாந்தை சந்தித்தார். மரியாதை நிமித்தமாக ரஜினியை சந்தித்து தீபாவளி வாழ்த்து தெரிவித்ததாக ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான புகைப்படங்களை எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ள ஓ.பி.ரவீந்திரநாத், "இன்று உலகமெங்கும் உள்ள மக்களின் இதயத்தில் நீங்கா இடம் பெற்ற தமிழ்த்திரையுலகின் பெருமைமிகு நாயகன், பத்மவிபூஷண், சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் மற்றும் லதாரஜினிகாந்தை தமிழக முன்னாள் முதல்அமைச்சரும், கழக ஒருங்கிணைப்பாளருமான ஓ.பன்னீர்செல்வம் உடன் இணைந்து, மரியாதை நிமித்தமாக அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து, எனது தீபாவளி திருநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு, ஆசி பெற்றேன்" என்று தெரிவித்துள்ளார்.

# கரூர் துயரம்: 19 நாட்களுக்கு பிறகு பனையூர் அலுவலகம் வந்த விஜய் நிர்வாகிகளுடன் சந்திப்பு

சென்னை, அக்.18

தவெக தலைவர் விஜய் கடந்த மாதம் 27ம் தேதி கரூரில் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலியாகினர். பெரும் சோகத்தை ஏற்படுத்திய இந்த சம்பவம் தொடர்பாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் என். ஆனந்த், இணைப் பொதுச் செயலாளர் சிடி ஆர் நிர்மல் குமார், மாவட்டச் செயலாளர் மதியழகன் ஆகியோர் மீது 5 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது.



இதனையடுத்து அவர்கள் தலைமறைவாகினர். இதில், மதியழகன் மட்டும் கைது செய்யப்பட்டார். மேலும், தலைமறைவான அவருக்கு அடைக்கலம் கொடுத்தன் காரணமாக கரூர் தவெக நகரச் செயலாளர் பவுன்ராஜ் என்பவரும் கைது செய்யப்பட்டார். இவர்கள் இருவரும் நீதிமன்ற காவலில் கடந்த 14ம் தேதி வரை சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதற்கிடையில், கைது செய்யப்பட்ட மதியழகன் மற்றும் பவுன்ராஜ் இருவரும் ஜாமீன் கோரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இதனையடுத்து அவர்கள் இருவருக்கும் ஜாமீன் வழங்கப்பட்டது. இன்றுஜாமீனில்வெளியே வந்தகரூர்மேற்குமாவட்ட செயலாளர் மதியழகன் மற்றும் பவுன்ராஜுக்கு திருச்சி மத்திய சிறை வாசலில் தவெகவினர் உற்சாக வரவேற்பு அளித்தனர். அதனை தொடர்ந்து இருவரும் தவெக தலைவர் விஜய், பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்தை சந்திக்க சென்னை புறப்பட்டனர்.

இந்த நிலையில், கரூர் துயர சம்பவம் நடந்து 19 நாட்களுக்கு பிறகு பனையூர் தவெக அலுவலகத்திற்கு வந்துள்ளார் அக்கட்சியின் தலைவர் விஜய். சிறையில் இருந்து வெளியே வந்த தவெக நிர்வாகிகள் மதியழகன், பவுன்ராஜ் ஆகியோர் விஜய்யை சந்தித்து பேசியுள்ளனர். தவெக நிர்வாகிகள் இருவரும் தங்களது குடும்பத்தினருடன் விஜய்யை சந்தித்துள்ளனர்.

அப்போது நிர்வாகிகள் இருவரிடமும் சிறையில் இருந்தபோது நேரில் வந்து தன்னால் பார்க்கமுடியவில்லை என விஜய் வருத்தம் தெரிவித்ததாகவும்,

சிறையில் அவர்கள் எப்படி இருந்தார்கள், என்னென்ன நடந்தது என விஜய் கேட்டறிந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. கரூர் சம்பவத்திற்கு பிறகு பனையூரில் உள்ள கட்சி அலுவலகத்திற்கு விஜய் முதல் முறையாக வந்து உள்ளது குறிப்பிடத்தக்கது.

# ராதாபுரத்தில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்தில் பல்நோக்கு விளையாட்டரங்கம் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்

சென்னை அக்.18

ரூ.18.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரத்தில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்தில் பல்நோக்கு விளையாட்டரங்கம் மற்றும் புதுக்கோட்டை பல்நோக்கு உள்விளையாட்டரங்கத்தை மேம்படுத்துதல் பணிகளுக்கு துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார். இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:



தமிழ்நாடு முதல்அமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில், அகில இந்திய அளவிலும், சர்வதேச அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில்தமிழ்நாட்டைச்சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

மேலும் தமிழ்நாடு முழுவதும் மாவட்ட விளையாட்டு மைதானங்கள், உள் விளையாட்டு அரங்கங்கள், நவீன உடற்பயிற்சி கூடங்கள், சட்டமன்ற தொகுதிகளில் முதல்அமைச்சர் சிறு விளையாட்டு அரங்கங்கள், பல்நோக்கு விளையாட்டரங்கம், விளையாட்டு விடுதி கட்டடங்கள் என பல்வேறு விளையாட்டு மேம்பாட்டு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு முதல்அமைச்சர் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் நடந்த அரசு விழாவில், திருநெல்வேலி மாவட்ட கடலோரப் பகுதிகளில் விளையாட்டு வீரர்கள் அதிக எண்ணிக்கையிலும், ஆர்வத்துடனும் உள்ளனர். அவர்களை ஊக்குவிப்பதற்காகவும், தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்க வைப்பதற்காகவும், திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரத்தில் ஒரு விளையாட்டு அரங்கம் மற்றும் பயிற்சி மையம் அமைக்கப்படும் என அறிவித்தார்.

இதனடிப்படையில், துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்தலைமைச் செயலகத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், விஜயபாதி கிராமத்தில் 14.77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்நோக்கு பயிற்சி கூடம், உள்ளரங்க கையுந்துபந்து மைதானம், உள்ளரங்க இறகுப்பந்து மைதானம், உடற்பயிற்சி கூடம், தடகள பாதை, நீளம் தாண்டுதல், கால்பந்து மைதானம், கூடைபந்து, கபாடி, கோ கோ, மற்றும் கைப்பந்து ஆடுகளங்கள், கேலரி வசதி, உடை மாற்றும் அறை மற்றும் சுற்று சுவர் ஆகிய வசதிகளுடன் பயிற்சி மையத்துடன் கூடிய பல்நோக்கு விளையாட்டரங்கம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

மேலும், 3.33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டுவளாகத்தில் அமைக்கப்பட்டு வரும் பல்நோக்கு உள் விளையாட்டரங்கத்தில் கூடுதல் பணிகளாக இறகுப்பந்து செயற்கை ஆடுகளம், குடிநீர் வசதி, ஒளிரும் மின்விளக்குகள் வசதி, உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள துணை முதல்அமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

இன்றைய தினம் மொத்தம் 18.10 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான விளையாட்டு மேம்பாட்டு திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்த நிகழ்ச்சியில், தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் அப்பாவு, அமைச்சர்கள் கே.என். நேரு, எஸ். ரகுபதி, சிவ.வீ. மெய்யநாதன், சட்டமன்ற உறுப்பினர் வை. முத்துராஜா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உரிமமின்றி பட்டாசு விற்றால் சட்ட நடவடிக்கை: எஸ்.பி. எச்சரிக்கை

தூத்துக்குடி அக்.18

தூத்துக்குடி மாவட்ட காவல்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:




தீபாவளி பண்டிகை வர உள்ள நிலையில் தூத்துக்குடி மாவட்டத்தில் உரிமம் இன்றி சட்ட விரோதமாக பட்டாசு விற்பனையில்ஈடுபடுபவர்கள் மற்றும் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபடுபவர்களை கண்காணித்து நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து உட்கோட்ட டி.எஸ்.பி.க்களுக்கும் மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் உத்தரவிட்டார். அவரது உத்தரவின்படி காவல் டி.எஸ்.பி.க்கள் மேற்பார்வையில் போலீஸ் இன்ஸ்பெக்டர்கள்தலைமையில் போலீசார் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன்படி தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 2 நாட்களில் மட்டும் பொது இடத்தில் மது அருந்தி பொதுஅமைதிக்கு பங்கம் விளைவித்தல் மற்றும் சட்ட விரோத மதுபான விற்பனையில் ஈடுபட்டதாக தூத்துக்குடி நகர உட்கோட்டத்தில் 6 வழக்குகளும், ஊரக உட்கோட்டத்தில் 3 வழக்குகளும், திருச்செந்தூர் உட்கோட்டத்தில் 6 வழக்குகளும், ஸ்ரீவைகுண்டம் உட்கோட்டத்தில் ஒரு வழக்கும், விளாத்திகுளம் உட்கோட்டத்தில் 5 வழக்குகளும், சாத்தான்குளம் உட்கோட்டத்தில் 13 வழக்குகளும் என மொத்தம் 34 வழக்குகள் பதிவு செய்து 34 நபர்களை கைது செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று ஏரல் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் சட்டவிரோதமாக உரிமம் இன்றி பட்டாசு வைத்திருந்த நபரை கைது செய்து நடவடிக்கை மேற்கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

எனவே தூத்துக்குடி மாவட்டத்தில் காவல்துறையினர் தொடர்ந்து ரோந்து பணியில் ஈடுபட்டு, சட்டவிரோத பட்டாசு விற்பனை மற்றும் மதுபான விற்பனையில் ஈடுபடுவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 'எதையும் சமாளிப்போம், உண்மை வெளியே வரும்' நிர்வாகிகளுக்கு தவெக தலைவர் விஜய் ஆறுதல்

சென்னை, அக்.18

த.வெ.க. தலைவர் விஜய் கடந்த செப்டம்பர் மாதம் 27ந்தேதி கரூரில் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் இந்தியா முழுவதும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து, விஜய் எந்த நிகழ்ச்சியிலும் பங்கேற்காமல் வீட்டிலேயே இருந்து வந்தார்.

இதற்கிடையே, கரூர் சம்பவம் தொடர்பாக கரூர் மாவட்ட செயலாளர் மதியழகனை போலீசார் கைது செய்தனர். ஐகோர்ட்டு தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் த.வெ.க. சார்பிலும், பாதிக்கப்பட்டவர்கள் சார்பிலும் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில், சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு நகல் கிடைத்ததை தொடர்ந்து த.வெ.க. மாவட்ட செயலாளர் மதியழகன் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.



இந்தநிலையில், கரூர் சம்பவத்தால் களையிழந்து போயிருந்த பனையூர்கட்சி அலுவலகத்திற்கு விஜய் நேற்று மாலை வந்தார். அவருடன் பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்தும் வந்தார். கட்சி அலுவலகத்திற்குள் ஏற்கனவே, சிறையில் இருந்து வெளியே வந்த மாவட்ட செயலாளர் மதியழகன், நிர்வாகி பவுன்ராஜ் ஆகியோர் தங்கள் குடும்பத்தினருடன் அங்கே காத்திருந்தனர். கட்சி அலுவலகம் வந்த விஜய், அவர்களை பார்த்ததும் கட்டிப்பிடித்து ஆறுதல் தெரிவித்தார்.

இந்த சந்திப்பு மிகவும் உணர்ச்சிகரமாகவும், நெகிழ்ச்சியாகவும் இருந்தது. நடந்த சம்பவங்கள் குறித்து அவர்களிடம் விஜய் கேட்டறிந்தார். சிறையில் இருந்த அனுபவத்தை மதியழகன் கண்ணீருடன் விஜய்யுடன் பகிர்ந்து கொண்டார்.

அப்போது விஜய், 'எதையும் சமாளிப்போம், உண்மை வெளியே வரும், பயப்படாதீர்கள், நான் இருக்கிறேன். பாதிக்கப்பட்ட குடும்பங்கள் நம் சொந்தங்கள். அவர்களை எப்போதும் பார்த்துக் கொள்ளுங்கள். அவர்களைபற்றியவிவரங்களை எப்போதும் நீங்கள் என்னிடம் சொல்ல வேண்டும்' என்று விஜய் அவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

'நான் விரைவில் கரூர் வந்து பாதிக்கப்பட்ட மக்களை சந்திப்பேன், அவர்களை நம்பிக்கையுடன் இருக்க சொல்லுங்கள்' என்று விஜய் அவர்களிடம் தெரிவித்துள்ளார்.

# திருநெல்வேலியில் 3 காவலர்களுக்கு சேமநல நிதியிலிருந்து உதவித்தொகை: எஸ்.பி. வழங்கினார்

திருநெல்வேலி அக்.18

திருநெல்வேலி மாவட்டம், சீவலப்பேரி காவல் நிலையத்தில் பணிபுரியும் சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் ஈஸ்வரமூர்த்தி, மூலைக்கரைப்பட்டி காவல் நிலையத்தில் பணிபுரியும் பெண் தலைமை காவலர் சரஸ்வதி மற்றும் மாவட்ட தனிப்பிரிவில் பணிபுரியும் முதல் நிலை காவலர் நம்பிராஜன் ஆகியோரின் மருத்துவ சிகிச்சைக்காக செய்த செலவு தொகையை காவலர் சேம நல நிதியிலிருந்து பெற்றுத் தருமாறு மாவட்ட எஸ்.பி.யிடம் மனு அளித்திருந்தனர்.



அதன்படி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் மேற்சொன்ன 3 காவலர்களுக்கும், சேம நல நிதியிலிருந்து உதவி தொகையை மாவட்ட காவல் அலுவலகத்தில் வைத்து நேற்று வழங்கினார்.

# இலங்கைக்கு கடத்த முயன்ற ரூ.30 லட்சம் மதிப்புள்ள பீடி இலைகள் பறிமுதல்: வாலிபர் கைது

தூத்துக்குடி அக்.18

தூத்துக்குடியில் கடற்கரை பகுதியில் இருந்து பீடி இலைகள் கடத்துவதாக, தூத்துக்குடி மாவட்ட கியூ பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை போலீஸ் இன்ஸ்பெக்டர் விஜய் அனிதாவுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அந்த தகவலின் அடிப்படையில் சப் இன்ஸ்பெக்டர் ராமச்சந்திரன், சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் ராமர், ஏட்டுகள் இருதயராஜ்குமார், இசக்கிமுத்து, காவலர்கள் பழனி பாலமுருகன், பேச்சிராஜா ஆகியோர் இன்று அதிகாலையில் தூத்துக்குடி நகர உட்கோட்டம் தாளமுத்து நகர், விவேகானந்தர் காலனி கடற்கரை பகுதியில் ரோந்து பணிக்கு சென்றனர்.



அப்போது அந்த கடற்கரையிலிருந்து இலங்கைக்கு கடத்துவதற்காக ஒரு லோடு வேன் இருப்பது தெரியவந்தது. உடனடியாக அந்த லோடு வேனை கைப்பற்றி சோதனை செய்தபோது, அதில் சுமார் 30 கிலோ எடை கொண்ட 27 மூட்டை பீடி இலைகளும், சுமார் 30 கிலோ எடை கொண்ட 3 மூட்டை கட்டிங் பீடி இலைகளும் இருப்பது தெரியவந்தது. இதனையடுத்து லோடு வேன் மற்றும் 30 மூட்டைகள் பீடி இலைகளை கியூ பிரிவு போலீசார் கைப்பற்றினர். பிடிபட்டுள்ள பீடி இலை மூட்டைகளின் மொத்த மதிப்பு ரூ.30 லட்சமாகும். மேலும் இது தொடர்பாக லோடு வேன் ஓட்டுநரான தாளமுத்துநகர், டேவிஸ்புரத்தைச் சேர்ந்த கருப்பசாமி மகன் உமா விஜயகுமார் (வயது 23) என்பவரை கைது செய்த கியூ பிரிவு போலீசார்

இது தொடர்பாக விசாரித்து வருகின்றனர்.

# ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் அரசு பணியாளர் தேர்வாணையம் மூலமே நிரப்பப்படும் மசோதா தாக்கல்

சென்னை, அக்.18

சட்டசபையில் அமைச்சர் கயல்விழி செல்வராஜ் தாக்கல் செய்த மசோதாவில் கூறியிருப்பதாவது:



மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் அரசுக்கு சொந்தமான பொதுத் துறை நிறுவனங்கள், அரசு கழகங்கள், வாரியங்கள், அதிகார அமைப்புகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பதாரர்களை தேர்வு செய்ய 2022ம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய சட்டமானது இயற்றப்பட்டது. இந்த சட்டத்தின் நோக்கத்தை விரிவுப்படுத்தி மாநில பல்கலைக்கழகங்களின் ஆசிரியர் அல்லா பணியிடங்களில் ஆட்கள் சேர்ப்பதற்கான பணிகளை, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்திடம் ஒப்படைக்கிறது. இது 22 பல்கலைக்கழகங்களில் ஆசிரியர் அல்லாத பணியிடங்களை தேர்ந்தெடுப்பதற்கான சிறந்த முறையை வழிவகுக்கும். அதற்காக தமிழ்நாடு சட்டம் 14/2022ஐ திருத்தம் செய்ய முடிவு செய்துள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

18.10.2025

# எச்சூர் கிராமத்தில் சிப்காட் தொழிற்சாலை அமைக்க நிலம் கையகப்படுத்துவதை அரசு கைவிட வேண்டும்: ராமதாஸ்



சென்னை அக்.18

பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், எச்சூர் கிராமத்தில் ஆயிரம் ஏக்கர் நஞ்சை விவசாய நிலங்கள் உள்ளன. இதில் 950 ஏக்கர் விவசாய நிலங்களை எச்சூர், பூதனூர் மற்றும் மேட்டுப்பாளையம் சிப்காட் திட்டத்திற்காக மாவட்ட நிர்வாகம் கையகப்படுத்த அறிவிப்புகள் வெளியிட்டுள்ளன. அந்தப் பகுதி விவசாயிகளுக்கும் இது சம்பந்தமாக அறிவிப்புகள் நேரடியாக வழங்கப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் எதிர்கால வாழ்வாதாரம் குறித்து அச்சத்தில் உள்ளனர்.

எச்சூர் கிராமத்தில் 5,000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. இந்த கிராமத்தில் இரண்டு பெரிய ஏரிகள் அமைந்து அந்த ஏரி நீர்பாசனத்தை கொண்டு ஆயிரம் ஏக்கர் நஞ்சை நிலத்தில் நெல் சாகுபடி செய்து வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். இந்த கிராம மக்கள் விவசாயமே முழு நேர தொழிலாக கொண்டுள்ளனர். இந்த நிலையில் எச்சூர், பூதனூர் மற்றும் மேட்டுப்பாளையம் சிப்காட் திட்டத்தின் விரிவாக்கத்திற்காக எச்சூர் கிராமத்தில் 950 ஏக்கர் நஞ்சை நிலம் எடுப்பதற்காக மாவட்ட நிர்வாகம் அந்த விவசாய நில உரிமையாளர்களின் வீடுகளில் அறிவிப்பை வழங்கி உள்ளது.

இந்த நோட்டீஸ் கிடைக்கப்பெற்ற விவசாயிகள் மிகப்பெரும் அச்சத்திலும் மனவேதனையிலும் உள்ளனர். ஏனெனில், இவர்களின் வாழ்க்கையின் வாழ்வாதாரத்திற்கு இந்த நஞ்சை விளைநிலங்களே உறுதுணையாக இருக்கின்றன. இந்த நிலங்களை நம்பி தான் இவர்களின் எதிர்காலமும், இவர்களின் பிள்ளைகளின் எதிர்காலமும் உள்ளன. இப்படி இருக்க, இந்த விளைநிலங்களை கையகப்படுத்த மாவட்ட நிர்வாகம் எடுக்கின்ற நடவடிக்கைகள் அவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும்.

நிலமில்லா ஏழைகளுக்கு நிலம் பகிர்ந்து அளிக்கப்படும் இந்த காலத்தில், தமிழக அரசு விவசாய நிலங்களை கையகப்படுத்தி விவசாயிகளின் மறுவாழ்விற்கு எந்தவித மாற்று இடத்தை தராமல் இழப்பீடு மட்டுமே தர முன்வருவது ஏற்புடையது அல்ல. ஆகவே எச்சூர் கிராமத்தில் விளைநிலங்களை கையகப்படுத்தும் முடிவை மாவட்ட நிர்வாகமும், மாநில அரசும் உடனே கைவிட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு வழிவகை செய்ய வேண்டும்.

தொழில் வளர்ச்சிக்கு, விவசாயத்திற்கு தகுதியற்ற வறண்ட பகுதிகளில் கட்டுமானத்திற்கு தகுதியாக உள்ள இடங்களை தேர்வு செய்து, அந்தப் பகுதியில் சிப்காட் நிறுவனங்களை அமைக்க மாநில அரசு வழி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சட்டசபையில் அமைச்சர் துரைமுருகனுடன் எம்.எல்.ஏ. வேல்முருகன் வாக்குவாதம்



தமிழக சட்டசபையில் கேள்வி நேரத்தின்போது பண்ருட்டி தொகுதி உறுப்பினர் தி.வேல்முருகன் பேசினார். அவர் பேசும்போது, "அந்தியூர் பவானி ஒரு பகுதி மக்களுக்கு விவசாயம் செய்யநீர்கிடைக்கவில்லை.அதற்குஅமைச்சர்நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார். அதற்கு பதில் அளித்த நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், "அந்தியூர் பிரச்சினையை பற்றி பேச அந்த தொகுதி உறுப்பினர் இருக்கிறார்" என்று பதில் அளித்தார். அமைச்சர் துரைமுருகன் இவ்வாறு கூறியதால் கடும் கோபம் அடைந்த வேல்முருகன், அவருடைய பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்தார். ஆனால், சபாநாயகர் அப்பாவு, அவருக்கு தொடர்ந்து பேச அனுமதி அளிக்கவில்லை. இதனால், அவையில் பரபரப்பு ஏற்பட்டது. தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவரான வேல்முருகன் தற்போது தி.மு.க. கூட்டணியில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் (18.10.2025)




புதிய முயற்சிகள் வெற்றியடையும் நாள். நண்பர்களிடம் இருந்து ஆதரவு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் சிறிய லாபம் உண்டு.





உழைப்புக்குஏற்றபலன்கிடைக்கும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.செலவுகள்கட்டுப்பாட்டில் இருக்கும்.





சில எதிர்பாராத தடை ஏற்பட்டாலும் அதைக் கடந்து முன்னேறுவீர்கள். நண்பர்கள் உங்களை ஊக்குவிப்பர்.




வீட்டு வேலைகளில் அதிக ஈடுபாடு. உடல் சோர்வு இருந்தாலும் மனநிம்மதி உண்டு. புதிய உறவு உருவாக வாய்ப்பு.




தன்னம்பிக்கையுடன் செயல்படுங்கள், சாதனை உங்கள் பக்கம். அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.




நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும் நாள். சொத்து சம்பந்தமான விவகாரத்தில் நல்ல முடிவு.




புதிய வாய்ப்புகள் வரலாம். அதிர்ஷ்டம் உங்களுடன் இருக்கும். நண்பர்கள் நம்பிக்கையுடன் நடப்பர்.




உடல்நலம் கவனிக்க வேண்டிய நாள். உறவினர்களிடம் நிதானமாக பேசுங்கள். பொறுமைதேவை.




வெளிநாட்டுச் செய்தி உங்களை மகிழ்விக்கும். கல்வியில் முன்னேற்றம். தொழிலில் புதிய வாய்ப்பு.




அழுத்தமான பணி இருந்தாலும் மனநிம்மதி உண்டு. குடும்பத்தில் நல்ல செய்தி கேட்பீர்கள்.




புதிய முயற்சி தொடங்க சிறந்த நாள். தொழிலில் முன்னேற்றம் உண்டு. எதிரிகள் விலகுவர்.




மன அமைதி பெறுவீர்கள். உறவினர்கள் மதிப்புடன் நடப்பர். நீண்டநாள் குழப்பம் தீரும்.

# 2,708 உதவி பேராசிரியர் பணியிடங்கள் இன்று முதல் விண்ணப்பம்




சென்னை, அக்.18

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2,708 உதவி பேராசிரியர் காலி பணியிடங்களுக்கு நேரடி நியமன அறிவிக்கையை ஆசிரியர் தேர்வு வாரியம் வெளியிட்டுள்ளது. அதன்படி இன்று (அக்.17) முதல் வரும் நவம்பர் 10ம் தேதி வரை ஆன்லைன் வழியே விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே கடந்த 6ந்தேதி வெளியிடப்பட்ட அறிவிக்கை ரத்து செய்யப்பட்டு புதிய அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. உதவி பேராசிரியர் பணிக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மீண்டும் விண்ணப்பிப்பவர்களுக்கு தேர்வுக் கட்டணம் செலுத்துதல், வயது வரம்பில் தளர்வு அளிக்கப்பட்டுள்ளது.பாடவாரியாக உதவி பேராசிரியர் காலி பணியிட விவரம் www.trb.tn.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

# கிளாம்பாக்கம், கோயம்பேடு பேருந்து நிலையங்களுக்கு கூடுதலாக சிறப்பு இணைப்பு பேருந்துகள் இயக்கம்

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு சென்னையில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு இயக்கப்படும் பேருந்துகள் கிளாம்பாக்கம், கோயம்பேடு மற்றும் மாதவரம் பேருந்து நிலையங்களில் இருந்து புறப்படும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்த பேருந்து நிலையங்களுக்கு சென்னையின் பல்வேறு பகுதிகளிலிருந்து பயணிகள் செல்வதற்கு ஏற்ற வகையில் கூடுதலாக சிறப்பு இணைப்பு பேருந்துகள் இன்று முதல் 19 ந்தேதிவரைஇயக்கப்படும்என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது: தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலை வெகுவாக குறைத்திடவும், வெளியூர் செல்லும் பயணிகள் எளிதாக பயணிக்கும் வகையில் 19ந்தேதி வரை 4 நாட்களுக்கும் வெளியூர் செல்லும் பேருந்துகள் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம், கோயம்பேடு பேருந்து நிலையம், மாதவரம் புறநகர் பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் இருந்து புறப்படும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளிலிருந்து மேற்குறிப்பிட்ட மூன்று பேருந்து நிலையங்களுக்கு மாநகர பேருந்துகள் ஏற்கனவே இயக்கப்பட்டு வருகின்றன. எனினும் எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வெளியூர் பயணிகள் மேற்குறிப்பிட்டுள்ள மூன்று பேருந்து நிலையங்களுக்கு எளிதாக சென்று வெளிமாவட்ட நீண்ட தூர பேருந்துகளை பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக மாநகர போக்குவரத்துக் கழகம் சார்பில் கூடுதலாக 275 சிறப்பு இணைப்பு பேருந்துகள் இன்று முதல் 19ந்தேதி வரை 4 நாட்கள் இயக்கப்பட உள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# ஒரேநேரத்தில் தட்கல் முன்பதிவு செய்ய ஏராளமானோர் முயற்சி.. முடங்கிய ரெயில்வே இணையதளம்

சென்னை, அக்.18

தீபாவளி பண்டிகை வரும் 20ந்தேதி கொண்டாடப்படுகிறது. தொடர்ந்து விடுமுறை நாட்கள் வருவதால் சென்னையில் வசிக்கும் ஏராளமானோர் சொந்த ஊர்களுக்கு செல்ல தொடங்கி உள்ளனர். இதையொட்டி சென்னையில் இருந்து திருநெல்வேலி, நாகர்கோவில், தூத்துக்குடி, செங்கோட்டை, கோவை, பெங்களூர், திருவனந்தபுரம், கொல்லம் உட்பட பல்வேறு நகரங்களுக்கு சிறப்பு ரெயில்கள் அறிவிக்கப்பட்டன.

ஆம்னி பஸ்களில் கட்டணம் அதிகரித்து உள்ளநிலையில், குடும்பத்துடன் செல்லும் பெரும்பாலானோர் ரெயில்களில் பயணம் செய்ய ஆர்வம் காட்டி வருகிறார்கள். இதனால் சிறப்பு ரெயில்களில் முன்பதிவு தொடங்கிய சில நிமிடங்களிலேயே டிக்கெட்டுகள் விற்றுத் தீர்ந்து வருகின்றன. பெரும்பாலான ரெயில்களில் காத்திருப்போர் பட்டியல் 100ஐ தாண்டியுள்ளது. ஆம்னி பஸ்களை விட ரெயில்களில்கட்டணம்குறைவுஎன்பதால், வழக்கமான ரெயில் மற்றும் சிறப்பு ரெயில்களில் டிக்கெட் கிடைக்காதோர் அடுத்ததாக பயணம் செய்யும் ஒரு நாளுக்கு முன்னதாக கூடுதல் கட்டணம் செலுத்தி தட்கல் முறையில் டிக்கெட் எடுக்க காத்திருந்து வருகின்றனர்.

இந்நிலையில்தீபாவளியை ஒட்டி தட்கல் ரெயில் டிக்கெட் முன்பதிவு செய்ய முயற்சிப்பவர்களால் ரெயில்வே (IRCTC) இணையதளம் முடங்கி உள்ளது.

காலை 11 மணிக்கு தட்கல் டிக்கெட் முன்பதிவு செய்ய ஏராளமானோர் முயற்சி செய்ததால் ரெயில்வே இணையதளம் முடங்கியது. இதனால் தீபாவளியை ஒட்டி நாளை (அக்.18) பயணிக்க தட்கல் முன்பதிவுக்கு காத்திருந்த பயணிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இந்நிலையில் அடுத்த ஒரு மணி நேரத்திற்கு ரெயில் டிக்கெட் முன்பதிவு மற்றும் டிக்கெட்டுகளை ரத்து செய்ய இயலாது என்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நடிகர் கார்த்திக், இயக்குனர் அமீர் வீடுகளுக்கு வெடிகுண்டு மிரட்டல்

சென்னைமயிலாப்பூரில்அமைந்துள்ளதமிழகபோலீஸ்டி.ஜி.பி.அலுவலக 'இமெயில்'முகவரிவெடிகுண்டு மிரட்டல் கடிதம் அனுப்பும் தளம் போன்று மாறி உள்ளது. இந்த இமெயில் முகவரிக்கு தினந்தோறும் வெடிகுண்டு மிரட்டல் கடிதம் வந்த வண்ணம் உள்ளது.

கவர்னர் ஆர்.என்.ரவி, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் வீடுகளுக்கும், நடிகர் ரஜினிகாந்த், நடிகைகள் நயன்தாரா, திரிஷா உள்ளிட்ட திரையுலகத்தை சேர்ந்தவர்கள் வீடுகளுக்கும் மிரட்டல் கடிதங்கள் ஏற்கனவே வந்துள்ளன. இந்த நிலையில் போலீஸ் டி.ஜி.பி. அலுவலக இமெயில் முகவரிக்கு நேற்று முன்தினம் இரவு வந்த மிரட்டல் கடிதத்தில், சென்னை ஆழ்வார்ப்பேட்டை வீனஸ் காலனியில் உள்ள நடிகர் கார்த்திக் வீடு, தியாகராயநகர் பாண்டிபஜார் பகுதியில் உள்ள திரைப்பட இயக்குனர் அமீர் வீடு ஆகிய இடங்களில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளது' என்று தெரிவிக்கப்பட்டது.

அதன்பேரில் போலீசார் குறிப்பிட்ட 2 பேரின் வீடுகளிலும் மோப்ப நாய், வெடிகுண்டு நிபுணர்கள் உதவியுடன் சோதனை நடத்தினார்கள். வழக்கம் போல் இந்த கடிதமும் புரளி என்பது உறுதியானது. போலீசார் சோதனை நடத்தி சென்ற சில மணி நேரத்தில் இவர்கள் 2 பேரின் வீடுகளுக்கும் மீண்டும் வெடிகுண்டு மிரட்டல் கடிதங்கள் வந்தது குறிப்பிடத்தக்கது.

# தியேட்டர்களில் முதல்நாள் சிறப்பு காட்சிகளை ரத்து செய்ய வேண்டும் தமிழக வாழ்வுரிமை கட்சி வலியுறுத்தல்

தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பண்டிகை நாட்களில் அல்லது புதிய திரைப்படங்கள் வெளியாகும் முதல் நாளில், அதிகாலை, காலை சிறப்புக் காட்சிகள் எனப்படும் தனிக் காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இது நேரடியாக பொதுமக்களின் வாழ்க்கையில் சுமையையும், ஒழுங்கின்மையையும் உருவாக்குகிறது. சிறப்பு காட்சிகள் என்ற பெயரில், சமூகச் சீர்கேடுகளை அனுமதிக்க முடியாது.

எனவே, தமிழக அரசு உடனடியாக முதல் நாள் சிறப்புக் காட்சிகளை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்றும், அரசு நிர்ணயித்த காட்சி நேரங்கள் மற்றும் டிக்கெட் விலை, கடுமையாக அமல்படுத்தப்பட வேண்டும் என்றும், விதிகளை மீறுபவர்களின் மீது, கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், தமிழக வாழ்வுரிமைக் கட்சி வலியுறுத்துகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

# "பைசன் காளமாடன் வெல்லட்டும்" மாரி செல்வராஜின் படத்தை பாராட்டிய உதயநிதி



மாரி செல்வராஜ், நடிகர் துருவ் விக்ரமை வைத்து 'பைசன்' என்ற படத்தினை இயக்கியுள்ளார். பா.ரஞ்சித்தின் நீலம் ஸ்டுடியோஸ் மற்றும் அப்ளாஸ் என்டர்டெயின்மெண்ட் நிறுவனம் இணைந்து இந்த படத்தை தயாரித்துள்ளது. இந்த படத்தில் அனுபமா பரமேஸ்வரன், லால், ரெஜிஷா விஜயன், பசுபதி, கலையரசன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

நிவாஸ் கே.பிரசன்னா இசையமைத்துள்ள இப்படம் அர்ஜுனா விருது வென்ற தூத்துக்குடியைச் சேர்ந்த கபடி வீரர் மணத்தி கணேசன் வாழ்க்கையை அடிப்படையாக வைத்து உருவாகியுள்ளது. இப்படம் இன்று திரையரங்குகளில் வெளியாகிறது.

இந்த நிலையில், பைசன் படத்தின் சிறப்பு காட்சியை பார்த்த துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், படத்தையும் படக்குழுவினையும் பாராட்டி பதிவு ஒன்றினை வெளியிட்டுள்ளார். அதில், "பைசன் திரைப்படம் பார்த்தேன். மீண்டும் ஒரு முக்கியமான படைப்பைத் தந்திருக்கிறார் மாரிசெல்வராஜ் சார்.

வன்முறை நிறைந்த வாழ்க்கைச் சூழலுக்கு மத்தியில், கபடி விளையாட்டில் சாதித்து அர்ஜுனா விருது பெற்ற கபடி வீரரின் வாழ்வை சிறப்பாக படமாக்கி இருக்கிறார். ஓர் இளைஞன், எல்லாவற்றுக்கும் மேலாக தன்னுடைய கபடி விளையாட்டின் மீது கொண்டுள்ள நம்பிக்கையும், அதுவே அவனை இலக்கை நோக்கி உயர்த்துவதையும் தனக்கே உரிய பாணியில் மாரி சார் கிராப்ட் செய்திருக்கிறார்.

படம் பேசுகிற அரசியலை உள்வாங்கி மிகச்சிறப்பாக நடித்திருக்கும் தம்பி துருவ் விக்ரம் உட்பட படத்தில் நடித்துள்ள அனைத்து கலைஞர்களுக்கும் என் வாழ்த்துகள். பைசன் காளமாடன் வெல்லட்டும்!" என்று பதிவிட்டுள்ளார்.

# டென்மார்க் ஓபன் பேட்மிண்டன்: சாத்விக் சிராக் ஜோடி காலிறுதிக்கு முன்னேற்றம்

டென்மார்க்கின் ஓடன்ஸ் நகரில் டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் தொடர் நடைபெற்று வருகிறது.

இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆடவருக்கான இரட்டையர் பிரிவு 2வது சுற்றில் இந்தியாவின் சாத்விக் சிராக் ஜோடி, தைவானின் யாங் போ ஹன்ஜங் ஹு லி ஜோடியுடன் மோதியது.

இதில் தொடக்கம் முதலே அபாரமாக ஆடிய சாத்விக் சிராக் ஜோடி 21-19, 21-17 என்ற நேர் செட் கணக்கில் யாங் போ ஹன்ஜங் ஹு லி ஜோடியை வென்று காலிறுதி சுற்றுக்கு முன்னேறியது.

# மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட்: இலங்கை தென் ஆப்பிரிக்கா அணிகள் மோதல்

13வது மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகளும் தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

இந்த தொடரில் இதுவரை நடந்துள்ள லீக் ஆட்டங்களின் முடிவில் ஆஸ்திரேலிய அணி அரையிறுதிக்கு முன்னேறி உள்ளது. இந்நிலையில், இந்த தொடரில் கொழும்புவில் இன்று நடைபெறும் லீக் ஆட்டத்தில் இலங்கை தென் ஆப்பிரிக்கா அணிகள் மோத உள்ளன. இந்த ஆட்டம் இந்திய நேரப்படி மதியம் 3 மணிக்கு தொடங்குகிறது.

மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் இதுவரை நடந்துள்ள லீக் ஆட்டங்களின் முடிவில் புள்ளிப்பட்டியலில் தென் ஆப்பிரிக்கா 3வது இடத்திலும், இலங்கை 7வது இடத்திலும் உள்ளன.

# புரோ கபடி லீக்: உ.பி. யோத்தாசை வீழ்த்திய அரியானா ஸ்டீலர்ஸ்

12 அணிகள் இடையிலான 12வது புரோ கபடி லீக் தொடர் டெல்லியில் நடந்து வருகிறது. இதில் நேற்றிரவு நடந்த பெங்களூரு புல்ஸ் பாட்னா பைரட்ஸ் அணிகள் இடையிலான ஆட்டம் 3232 என்ற புள்ளி கணக்கில் சமனில் முடிந்தது.

இதைத் தொடர்ந்து முடிவை அறிய கொண்டு வரப்பட்ட டைபிரேக்கரில் பாட்னா அணி 65 என்ற புள்ளி கணக்கில் பெங்களூருவை வீழ்த்தி 4வது வெற்றியை பெற்றது. பெங்களூரு வீரர் அலிரெஜா மிர்ஜாயன் 17 புள்ளிகள் திரட்டியும் பலன் இல்லை.

மற்றொரு ஆட்டத்தில் முன்னாள் சாம்பியனான யு மும்பா 3326 என்ற புள்ளி கணக்கில் தெலுங்கு டைட்டன்சை தோற்கடித்து 8வது வெற்றியை வசப்படுத்தியது.

தொடர்ந்து நேற்று நடைபெற்ற 3வது ஆட்டத்தில் நடப்பு சாம்பியனான அரியானா ஸ்டீலர்ஸ் 5326 என்ற புள்ளி கணக்கில் உ.பி. யோத்தாசை வீழ்த்தி 8வது வெற்றியை பெற்றது.

# வெளிநாட்டு லீக் போட்டிகளில் இந்திய வீரர்களை விளையாட அனுமதிக்க வேண்டும் ரவி சாஸ்திரி



ஐ.பி.எல். பாணியில் வெளிநாடுகளில் நடத்தப்படும் டி20 லீக் கிரிக்கெட் போட்டிகளில் இந்திய வீரர்கள் பங்கேற்க இந்திய கிரிக்கெட் வாரியம் தடை விதித்துள்ளது.

அவர்கள் ஓய்வு பெற்ற பிறகே அத்தகைய போட்டிகளில் விளையாட முடிகிறது. இந்த நிலையில் இந்திய வீரர்களை வெளிநாடுகளில் நடக்கும் டி20 லீக் தொடர்களில் விளையாட அனுமதிக்க வேண்டும் என்று இந்திய முன்னாள் தலைமை பயிற்சியாளர் ரவி சாஸ்திரி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் பேசுகையில், இந்தியா மிகப்பெரிய நாடு. அனைவருக்கும் இந்திய அணியில் விளையாட வாய்ப்பு கிடைக்காது. எல்லோராலும் அதை சாதிக்கவும் முடியாது. டெஸ்ட் கிரிக்கெட்டில் ஆடாத வீரர்கள் அனேகமாக சி அல்லது 9 கிரேடு ஒப்பந்தத்தில் தான் இருப்பார்கள்.

அப்படிப்பட்ட வீரர்களை ஏன் பிக்பாஷ் (ஆஸ்திரேலியா) போன்ற வெளிநாட்டு லீக் போட்டிகளில் விளையாடுவதில் இருந்து தடுக்க வேண்டும்.

எப்படி ஐ.பி.எல். போட்டி பல இளம் வீரர்கள், உயர்தர வீரர்களுடன் இணைந்து விளையாட உதவுகிறதோ, அதே போல் இத்தகைய லீக் வாய்ப்புக்காக காத்திருக்கும் வீரர்களின் கிரிக்கெட் வாழ்க்கைக்கு கைகொடுக்கும். அத்துடன் அழுத்தத்தை சிறப்பாக கையாள கற்றுக்கொள்வர்கள். ரிக்கி பாண்டிங், ஸ்டீபன் பிளமிங் போன்ற வீரர்களிடம் இருந்து நிறைய விஷயங்களை கற்றுக்கொள்வர்கள்.

அது அவர்களுக்கு நல்ல பாடமாக இருக்கும். வெளிநாட்டில் நடக்கும் தொடர்களில் ஆடுவதை விட சிறந்த கல்வி எதுவுமில்லை. அந்த அனுபவம் கிரிக்கெட் அடிப்படையில் மட்டுமல்லாமல், வெவ்வேறு கலாசாரங்களையும், முறைகளையும் புரிந்து கொள்ளவும் உதவும். இவ்வாறு அவர் கூறினார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.